# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2288/29 - 2022 ජූලි මස 15 වැනි සිකුරාදා - 2022.07.15

*2288/29 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. அ. இல.: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/1*

### *பிரகடனம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 38(1)(ஆ) ஆம் உறுப்புரையின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அதிமேதகு கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் இரண்டாயிரத்து இருபத்திரெண்டாம் ஆண்டு யூலை மாதம் பதின்நான்காம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு சனாதிபதி பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளதாலும்,*

*குறித்த அரசியலமைப்பின் 40(1)(அ) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இலங்கைப் பாராளுமன்றத்தால் அதன் பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து சனாதிபதி பதவிக்குத் தெரிவுசெய்து நியமிப்பதற்கான தகைமைகளைக் கொண்ட யாதேனும் பாராளுமன்ற உறுப்பினரொருவர் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியாகத் தெரிவுசெய்து நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதனாலும்,*

*அவ்வாறு இலங்கைப் பாராளுமன்றத்தினால் புதிய சனாதிபதியொருவர் தெரிவுசெய்து நியமிக்கப்படும்வரை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதம அமைச்சர் மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்க அவர்கள், இரண்டாயிரத்து இருபத்திரெண்டாம் ஆண்டு யூலை மாதம் பதினைந்தாம் திகதி, குறித்த அரசியலமைப்பின் 157அ (7) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 32(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளவாறு குறித்த அரசியலமைப்பின் நான்காம் மற்றும் ஏழாம் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள உறுதியுரைகளை மொழிந்து அதில் கையொப்பமிடுவதன் மூலம் குறித்த அரசியலமைப்பின் 40(1)(இ) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி பதவியில் பதிற்கடமை புரிவதற்கான கடமைகளையும் பணிகளையும் பொறுப்பேற்றார் என்பது இத்தால் பிரகடனப்படுத்தப்படுகின்றது.*

*இதனை அனைவரும் இத்தால் அறிந்துகொள்ளல் வேண்டும்.*

*இரண்டாயிரத்து இருபத்திரெண்டாம் ஆண்டு யூலை மாதம் பதினைந்தாம் திகதி கொழும்பில் அளிக்கப்பட்டது.*

***காமினீ செனரத்,***
*சனாதிபதியின் செயலாளர்.*

*2022, யூலை மாதம் 15 ஆந் திகதி.*
*கொழும்பு - 01.*